Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 137/ 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| Name: | கமல் பாஷா | Calling: | லெதர் கம்பெனி வேலை |
|---|---|---|---|
| Father's/Husband's Name: | சௌக்கார் பாஷா | Religion: | |
| Village: | ஜாப்ராபாத் | Age: | 36 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 06.10.2025

( எதிரி ஆஜர்..)

அ.சா. 4 முதன்மை விசாரணை

நான் ஜாப்ராபாத்தில் வசித்து லெதர் கம்பெனி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.அவரின் பெயர் விஜீ. கடந்த 27.11.2017 ம் தேதி, நானும் என்னுடன் வேலை பார்க்கும் அப்சல் பாஷா என்பவரும் வேலை முடித்துவிட்டு காதர் பேட்டை அருகே வரும் போது போலிசார் எங்கள் வாகனத்தை நிறுத்து சோதனை செய்தார்கள். அப்போது விஜி பல்சர்வாகனத்தில் வந்தவர் போலிசாரிடம் மாட்டிக்கொண்டார். அவர் நான்கு வண்டிகளை எடுத்ததாக கூறினார். ஒரு வாகனமான டிஸ்கவர் 4852 என்பதை காக்கி தெருவிலும், முஸ்லீம் பூரில் பேசன்புரோ வாகனத்தையும் துர்கா ஸ்டோர் அருகே 24.11.2017 ம் தேதி, பல்சர் பிளான்ட் வாகனத்தையும், 25.11.2017 ம் ஸ்பிளன்டர் வாகனத்தையும் திருடியதாக போலிசார் கேட்டுக்கும் போது என்முன்னிலையில் கூறினார். போலிசார் அங்கு என்னிடம் ஒரு கையொப்பம் ஒப்புதல் கையெழுத்து என வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அதே போல் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கிறஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

எதிரி தான் திருடியதாக கூறிய நான்கு இருசக்கர வாகனங்களை அவரது வீட்டிற்கு பின் மறைத்து வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் அளிக்கும் போது கூறினாரா என்றால் ஆமாம். போலிஸ்சாரிடம் எதிரி அந்த இருசக்கர வாகனங்களை ஆஜர்படுத்தும்போது நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை.

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து எந்தவிதமான அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்வதற்கு காவல் நிலையத்திற்கு வரசொல்லி அலைபேசியில் மூலம் தகவல் சொன்னார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றாலும் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்ற பின் எனக்கு வழக்கு விவரங்களை காவல் நிலையத்தில் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் இன்று நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது அல்ல என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்தில் போலிசார் மற்றும் மக்கள் கூட்டம் இருந்தது என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்றபோது என்னிடம் பெயர், முகவரி ஆகியவற்றை எழுதிக்கொண்டார்கள். பெயர், முகவரி ஆகியவற்றை எழுதிக்கொண்ட தாளில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கின்றேன் என்றால் உதயேந்திரத்தில் உள்ள டிராப்பிக்கல் லெதர்கம்பெனியில் வேலை செய்கின்றேன் என்றால் சரிதான். நான் வேலை முடித்துவிட்டு ஜாப்ராபாத்தில் உள்ள என் வீட்டிற்கு வரும் வழியில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் உதயேந்திரம், மேட்டுபாளையம், ஜாப்ராபாத் வழியாக தான் செல்லவேண்டும். போலிசார் எங்களிடம் விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடமும் அப்சல் என்பவரிடமும் எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம்

பெற்றார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரம் ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் பொய் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிதரப்பில் மெமோவில் வாங்கியுள்ள முதல் கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். **மெமோ எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

நீதிமன்ற கேள்விகள்.

1. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பெறப்பட்டது ?

பதில் – காதர் பேட்டை இரயில்வே நிலையம்.

2. எதிரியிடம் இருந்து போலிசார் என் முன்னிலையில் ஏதேனும் வாகனங்களை கைப்பற்றினார்களா ?

பதில் – இல்லை, எங்கள் வாகனத்தை சோதனை செய்யும் போது எதிரியை பிடித்து வைத்திருந்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கமல் பாஷா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 137/ 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | அப்சல் பாஷா | Calling: | லெதர் கம்பெனி வேலை |
| Father's/Husband's Name: | அஸ்லாம் பாஷா | Religion: | |
| Village: | ஜாப்ராபாத் | Age: | 30 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 06.10.2025

( எதிரி ஆஜர்.)

அ.சா. 5 முதன்மை விசாரணை

நான் ஜாப்ராபாத்தில் வசித்து லெதர் கம்பெனி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.அவரின் பெயர் விஜீ. கடந்த 27.11.2017 ம் வருடம் மாலை 04.00 மணியளவில் நானும் கமல் பாஷாவும் காதர் பேட்டை அருகே சென்றுக்கொண்டிருந்தோம். காதர் பேட்டையில் போலிசார் வாகனங்களை பிடித்து கொண்டு இருந்தார்கள். அப்போது விஜீ என்பவரை போலிசார் பிடித்து விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள். என்ன விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள் என நினைவில்லை. டிஸ்கர் வாகனத்தை பிடித்து வைத்திருந்தார்கள் யாரிடம் என்று நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்துகளை வாகனங்களை பிடித்த போது போட்டுக்கொடுத்தேன். **அந்த கையெழுத்துகள் முறையே அ.த.சா.ஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். நான் காலையில் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் இருந்து சாட்சி சொல்லவருமாறு அழைத்ததின் பேரில் தான் வாணியம்பாடி நகர காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தான் நான் முதன்மை விசாரணையில் கூறியதை சொல்லிக்கொடுத்தார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரிதான். மற்றப்படி வழக்கு விவரங்கள் எனக்கு எதும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் பெயர், முகவரி ஆகியவற்றை எழுதிக்கொண்டு எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம்எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் டிராப்பிக்கல் கம்பெனியில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் உதயேந்திரம், மேட்டுபாளையம், ஜாப்ராபாத் வழியாக தான் செல்லவேண்டும். போலிசார் என் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து எந்தவிதமான வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கின்றேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிதரப்பில் மெமோவில் வாங்கியுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அந்த மெமோ ஏற்கனவே எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அப்சல் பாஷா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K